# தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

## C.S.I. TAMIL PARISH AL AIN, UAE




கண்மணியைப்போல என்னைக் காத்தருளும். என்னை ஒடுக்குகிற துன்மார்க்கருக்கும், என்னைச் சூழ்ந்து கொள்கிற என் பிராணப்பகைஞருக்கும் மறைவாக, உம்முடைய சட்டைகளின் நிழலிலே என்னைக் காப்பாற்றும்.

-சங்:17:8,9

*Keep me as the apple of your eye; hide me in the shadow of your wings, from the wicked who do me violence, my deadly enemies who sarround me.*

*Psalm 17:8,9*

AUGUST '2022

# CHAMP FOR CHRIST

## HELD ON 10TH & 11TH SEPT

@ PARSONAGE

### MEMORY VERSE

ITS COMPULSORY FOR ALL THE CLASSES.
CBS CLASS TEACHERS HAVE GIVEN VERSES FOR THEIR RESPECTIVE CLASSES.

### STORY TELLING

IT SHOULD BE BIBLICAL STORIES.
STORY LENGTH - [MINIMUM - 1MIN] [MAX - 5MIN]
FOR SENIOR & TEENS CLASS

### FANCY DRESS

IT SHOULD BE BIBLICAL FANCY DRESS.
ACTION / DRESS / DIALOGUE WILL BE COUNTED AS EXTRA MARKS
FOR KINDER, BEGINNER, PRIMARY, JUNIOR & INTER

### SINGING

IT SHOULD BE BIBLICAL SONGS.
SONG LENGTH - [MINIMUM - 1MIN] [MAX - 3MIN]
FOR ALL THE CLASSES.

*Register Your Names on or before 20th Aug 2022 at the below mentioned WhatsApp number.*

MR. RAVI
0544044038

MRS. AUGUSTA
0566411676

REGISTER NOW ›



# FROM THE PASTOR'S DESK

கிறிஸ்துவுக்குள் அன்பான இறை மக்களே!

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

**ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைக்கொண்டிருங்கள்.**

**- கலா:5:1**

**FOR FREEDOM CHRIST HAS SET US FREE; STAND FIRM THEREFORE, AND DO NOT SUBMIT AGAIN TO A YOKE OF SLAVERY.**

**-GAL:5:1**

## ஆன்மீகம் சார்ந்த விடுதலை

- ஆண்டவரின் நற்செய்தியை ஏற்றுக்கொண்ட அனைவருக்கும் விடுதலை
- ஆண்டவரின் மீது நம்பிக்கை கொள்ளும் அனைவருக்கும் விடுதலை
- ஆண்டவரின் மீட்பின் பணியை பிறரோடு அடையாளப்படுத்தி செய்வதே விடுதலை.

ஆண்டவர் இயேசுவின் வாழ்விலும் பணியிலும் காணப்பட்ட பணிவும் தாழ்மையும் அமைதியும் நிறைவேற்ற நம்மை அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்.

கடந்த காலம் முழுவதும் நம்மை வழிநடத்தி, பாதுகாத்து வருகின்ற நமது ஆண்டவரை உங்களுடன் இணைந்து உள்ளத்தின் ஆழத்தில் இருந்து துதிக்கின்றேன்... தொடர்ந்து இந்த காலக்கட்டத்தில் இந்த தேசத்தில் நம்மை பாதுகாத்து வழி நடத்தி வருகின்ற ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். தொடர்ந்து அநேகர் இந்த காலகட்டத்தில் வேலைவாய்ப்புகள் இல்லாமல் பொருளாதாரத்தில் மிகவும் கஷ்டப்படுகிற குடும்பங்களுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்.

வருகின்ற விடுமுறை நாட்கள் நமக்கு பயனுள்ள நாட்களாக பயன்படுத்திக் கொள்வோம் அநேகர் தங்கள் சொந்த இடங்களுக்கு பயணம் செய்ய இருக்கிறார்கள் அவர்களின் சுக பயணத்திற்காக குடும்பங்களுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்.

இந்த மாதத்தில் நமது தாய் நாடாகிய இந்திய தேசத்தின் சுதந்திர தினமாக ஆகஸ்ட் 15-ஆம் நாள் அனுசரிக்க இருக்கின்றோம். அந்த நாளில் நம்முடைய தேசத்திலே உண்மையான விடுதலையும், முழுமையான சமாதானமும், வாழ்வும், நீதியும் ஏழை எளியோரின் வாழ்வுக்கு வழிகாட்டும் தேசமாகவும் செயல்பட நம்முடைய தேசத்தின் தலைவர்களுக்காக ஜெபிக்கவும் நம்மையும் நம்முடைய தேசத்தையும் அர்ப்பணித்து ஆண்டவரின் பாதத்தில் ஒப்புக்கொடுக்க அழைக்கப்படுகிறோம்.

## CHAMPIONS FOR CHRIST -2022

இந்த விடுமுறை நாட்களில் நமது பிள்ளைகளின் ஆவிக்குரிய வாழ்வுக்கு பயனுள்ள நாட்களாக பயன்படுத்திக் கொள்ள நமது திருச்சபையின் வாயிலாக வருகின்ற செப்டம்பர் மாதம் CHILDREN'S BIBLE SCHOOL (CBS )- பிள்ளைகளுக்கு CHAMP FOR CHRIST-2022 என்ற நிகழ்ச்சியை ஒழுங்கு செய்ய இருக்கிறோம் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஆயத்தப்படுத்தி இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற உற்சாக படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.அத்துடன் இந்த நிகழ்வுக்காக ஜெபிக்குமாறு அழைக்கப்படுகிறோம்.

தொடர்ந்து இந்த காலங்களில் நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக,திருச்சபை களுக்காக,

ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, நமது பிள்ளைகளின் கல்விற்க்காக, அவர்களின் எதிர்காலத்திற்காக, அவர்களின் உயர் கல்விக்காக அத்துடன் அவர்களின் ஆவிக்குரிய வாழ்விற்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். மேலும் நமது திருச்சபையின் அனைத்து திருப்பணிகளுக்காக, திருச்சபையின் அனைத்து குடும்பங்களுக்காக ஊக்கமாய் ஜெபிக்கும் மாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்........

Rev.S.D.Baskar



# மாசற்ற (அ)குற்றமற்ற ஒருவரின் மன்றாட்டு (ஜெபம்)

**சங்கீதம்:17**

**கண்மணியைப்போல என்னைக் காத்தருளும். என்னை ஒடுக்குகிற துன்மார்க்கருக்கும், என்னைச் சூழ்ந்து கொள்கிற என் பிராணப்பகைஞருக்கும் மறைவாக, உம்முடைய சட்டைகளின் நிழலிலே என்னைக் காப்பாற்றும்.**

**-சங்கீதம்:17:8,9**

**KEEP ME AS THE APPLE OF YOUR EYE; HIDE ME IN THE SHADOW OF YOUR WINGS, FROM THE WICKED WHO DO ME VIOLENCE, MY DEADLY ENEMIES WHO SURROUND ME.**

**-PSALM:17:8,9**

## முன்னுரை

இந்த சங்கீதம் 7, 26, 53 ஆகிய சங்கீதங்களுடன் தொடர்புடையவை ஆகும்.இந்த சங்கீதத்தை"மாசின்மைத்(அ)மாசற்றோரின்"சங்கீதம் என்று அழைக்கப்படுகின்றது. (சங்:17:3-5) அப்பழுக்கற்ற ஆண்டவரின் அடியவர் ஒருவர் தன்னுடைய குற்றமின்மையை ஆண்டவரிடம் எடுத்துக் கூறி உதவி வேண்டுகிறார்.சவுலின் தாக்குதலுக்குத் தப்பியோடிய தாவீது ஆண்டவரை நோக்கி எழுப்பிய அழுகைக்குரலாகவும்/ஜெபமாகவும் இந்த சங்கீதம் கருதப்படுகிறது.

இந்த சங்கீதத்தில்...

- என் வழக்கின் நியாயத்தைக் கேளும்
- என் வேண்டுதலை உற்றுக்கேட்டருளும்
- என் மன்றாட்டுக்குச் செவி சாய்த்தருளும்
- எனக்கு நீதி கிடைக்கட்டும்
- உன் கண்கள் என்னை காணட்டும்
- என்னைப் புடமிட்டுப் பார்த்திடும் (சங்:17:1-3).

போன்ற வேண்டுதல்கள் மாசற்ற ஒருவரின் ஆழ்ந்த விசுவாசத்தை (அ) நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

## Psalm:17

*This is an individual lament, dealing especially with cases in which a person considers himself unjustly accused of wrong (compare Psalm-7). The Psalm is a prayer for vindication, and it ends with a feeling of confidence (compare Psalm-16).*

### சங்கீதம்:17:1,2: ஆண்டவரே என் வேண்டுதலைக் கேட்டு எனக்கு நீதி வழங்கும்

வசனம்:1 - கர்த்தாவே, நியாயத்தைக் கேட்டருளும், என் கூப்பிடுதலைக் கவனியும்

இது வழக்கு மட்டும் நேர்மையானதல்ல, வழக்கைக் கேட்பவரும் நேர்மையானவர் என்பதாகும். எனவே இங்கு" ஆண்டவரே நேர்மையானவர்" என்று புரிந்துக் கொள்ள அழைக்கப்படுகிறோம். நேர்மையான ஆண்டவரை என் வேண்டுதல் கேட்டு எனக்கு நீதி வழங்கும் என்று மாசற்ற (அ) குற்றமற்ற ஒருவர் ஜெபிக்கின்றார்.

### சங்கீதம்:17:3,5– நான் மாசற்றவன் (அ) குற்றமற்றவன்

வசனம்:3- நீர் என் இருதயத்தைப் பரிசோதித்து, இராக்காலத்தில் அதை விசாரித்து, என்னைப் புடம்பிட்டுப் பார்த்தும் ஒன்றும் காணாதிருக்கிறீர்.

இது தீய செயல்களில் ஈடுபடுவதற்கு ஏற்ற நேரம் இரவு எனினும் அந்த வேளையிலும் நான் மாசற்றவன் (அ) குற்றமற்றவன் என்றோ என்னை பார்க்க முடியும் என்று கூறுவதை காணலாம்.

வசனம்:4- துஷ்டனுடைய பாதைகளுக்கு விலக்கமாய் என்னை காத்துக் கொள்கிறேன்.

இது துஷ்டன் என்று சொல்லுவது கடவுளின் வழிகளுக்கு மாறுபட்டவனைக் குறிக்கும். இவர்கள் கடவுளின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்க மாட்டார்கள். எனவே நான் உம் வார்த்தையைக் கடைபிடித்து தீய வழி எதிலும் நான் செல்ல மாட்டேன், நான் உமக்குள் எப்பொழுதும் மாசற்றவனாய் இருப்பேன் என்று சொல்லி ஜெபிப்பது ஆகும்.

## சங்கீதம்:17:6,7– நம்பிக்கையோடு/ விசுவாசத்தோடு மன்றாடுதல்

வசனம்:7- உமது வலது கரத்தினால் தப்புவித்து இரட்சிக்கிறவரே

**இது கடவுளின் வலிமையை அடையாளப்படுத்துகிறது. அந்த வலிமையினால் என்னைக் காத்துக் கொள்ளும் என்று ஜெபிப்பது ஆகும்.**

வசனம்:9- உம்முடைய செட்டைகளின் நிழலிலே என்னைக் காப்பாற்றும்

**இது உமது பாதுகாப்பில் என்னை காத்தருளும், இது தாய் பறவையின் அன்பு, பாசம் இவற்றை அடையாளப்படுத்துகிறது. இது கடவுள் தன்னுடைய இரக்கத்தினால் பாதுகாப்பவர் என்ற விசுவாசத்துடன் ஜெபிப்பது ஆகும்.**

## சங்கீதம்:17:10–14– எதிரிகளின் தாக்குதலில் இருந்து உன் நீதியை நிலைநாட்டும்.

வசனம்:13- கர்த்தாவே, என் ஆத்துமாவைத் துன்மார்க்கருடைய கைக்கு உம்முடைய பட்டயத்தினால் தப்புவியும்.

வசனம்:14- மனுஷருடைய கைக்கும், இம்மையில் தங்கள் பங்கைப் பெற்றிருக்கிற உலக மக்களின் கைக்கும் உம்முடைய கரத்தினால் என்னைத் தப்புவியும்.

**இந்த இரண்டு வசனங்களில் மிகுந்த நம்பிக்கையோடு குற்றமற்ற (அ) மாசற்ற ஒருவர் தனக்கு பாதுகாப்பு வேண்டி எதிரிகள், தீயவர்களிடம் இருந்து (அ) இவ்வுலகின் மக்களிடமிருந்து உம் நீதியினிமித்தம் என்னை காப்பாற்றி இந்த உலகத்தில் நீதியை நிலைநாட்டும் என்று ஜெபிப்பது ஆகும்.**

## சங்கீதம்:17:15 – கர்த்தாவே, உம்மில் நம்பிக்கை வைக்கிறேன்.

வசனம்:15- நான் விழிக்கும் போது உமது சாயலால் திருப்தியாவேன்..... இதற்கு மூன்று பொருள்கள் கொடுக்கலாம்.

- இரவு நேரத்தில் தூக்கத்திலிருந்து
- துன்பம், துயரங்களிலிருந்து
- சாவு என்னும் நெடிய உறக்கத்திலிருந்து உயிர்த்தெழும்பும்போது

இப்படி எதிர்கால வாழ்வில் உம்மோடு நிலைத்திருப்பேன் என்பதை நம்பிக்கையுடன் ஜெபிப்பது ஆகும்.

## நிறைவாக

இப்படி குற்றமற்ற அல்லது மாசற்ற கடவுளின் மீது நம்பிக்கையுடன் ஜெபிக்கின்ற மக்களாகிய நாம் நம்முடைய வாழ்விலும் குற்றமற்றவர்களாக, அல்லது மாசற்றவர்களாக, தூய்மையான வாழ்வுடன் வாழ்ந்து அவருக்குள் விசுவாசத்தோடு நிலைத்திருந்து ஜெபிக்கும் போது நம்முடைய துன்பங்களில் இருந்தும் ஆபத்துகளில், இருந்தும் நம்மை விடுவித்து நம்மோடு எப்போதும் ஆண்டவர் துணையாய் இருப்பார் என்பதை புரிந்து கொண்டு அவருக்குள் அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னதப் பணியில் உங்கள் ஆயர்.

Rev.S.P.Baskar



# யாகேல்



மத்தேயு:*1:6*

**சிசெரா கால்நடையாய்க் கேனியனான ஏபேலின் மனைவி யாகேலுடைய கூடாரத்திற்கு ஓடி வந்தான்; அப்பொழுது யாபீன் என்னும் ஆத்சோரின் ராஜாவுக்கும், கேனியனான ஏபேரின் வீட்டுக்கும் சமாதானம் உண்டாயிருந்தது**

**—நியாதி:4:17**

**BUT SISERA FLED AWAY ON FOOT TO THE TENT OF JAEL, THE WIFE OF HEBER THE KENITE, FOR THERE WAS PEACE BETWEEN JABIN THE KING OF HAZOR AND THE HOUSE OF HEBER THE KENITE.**

**- JUDGES:4:17**

## முன்னுரை:

தெபோரவைப் பற்றி படிக்கும் போது, இஸ்ரயேலை மிகவும் துன்பப்படுத்திய யாமீன் அரசனின் காலத்தில் குறிப்பாக இருபது ஆண்டுகள் இஸ்ரேயேல் மக்கள் ஒடுக்கப்பட்டபோது (நியாதி:4:12) இதனை புரிந்து கொண்ட யாகேல் தனக்கு கிடைத்த வாய்ப்பினை பயன்படுத்தி இஸ்ரயேல் மக்களுக்காக போராடுகின்றார். கேனிய இனத்து பெண்ணான யாகேலுக்கு தெபோரவைக் காட்டிலும் துணிச்சல் அதிகமாக இருந்தது (நியாதி:4:9) என்பதை புரிந்து கொள்ளலாம் ஏனெனில் தெபோரா பாராக் இருவருக்கும் கிடைக்காத வாய்ப்பு யாகேலுக்கு கிடைக்கிறது.

## யாகேல் ஒப்படைப்புள்ளவர்:

இவர் இஸ்ரயேல் மக்கள் அதிகார வர்க்கத்தின் கீழ் துன்பப்படுவதை நேரில் பார்த்தவர். சிசெராவிடம் இருந்த தொள்ளாயிரம் இருபது தேர்கள் எங்கே? பாராக்கிடம் இருந்த வெறும் பத்தாயிரம் பேர் எங்கே? ஆனாலும் ஆண்டவர் இவர்கள் பக்கத்தில் இருந்ததினால் சிசெராவை கலங்க வைத்து விரட்டி அடித்தார்கள் சிசெரா தம்முடைய ஆட்சியின் காலத்தில் மக்களுக்கு செய்த தீமைகளை உணராத இருந்தார்கள். யாகேல் ஒரு ஒப்படைப்புள்ள போராளி என்பது இவருடைய செயலின் மூலம் புரிந்துக் கொள்ள முடிகிறது. இஸ்ரயேலில் இப்படிப்பட்ட பெண்கள் வாழ்ந்து இருக்கின்றார்கள்.

## யாகேல் துணிச்சல் உள்ளவர்:

தெபோரா பாராக்கை அழைத்து போருக்குப் போ என்று பேச்சு வார்த்தை நடத்திய போது "நீயும் என்னோடு வா" என்று தெபோராவை அழைக்கின்றார். அவரும் வருவதற்கு ஒத்துக் கொள்கிறார். இருவரும் இணைந்து சிசெராவை விரட்டி அடித்த பின் சிசெராவை தனி ஒருவராக சந்திக்கிறார் யாகேல். ஒரு போர் வீரனை, படைத்தலைவனை தனியாக சந்திப்பது மட்டுமல்ல அவரைக் கொலை செய்து விடுகிறார். (நியாதி: 4:2) பிறகு இந்தச் செய்தியை பாராக்குக்கு வெளியே சென்று அறிவிக்கவும் செய்கிறார் (நியாதி:4:22) இந்த செயல்பாடு இவருடைய துணிச்சலைக் காண்பிக்கின்றது.

## யாகேல் ஒடுக்கப்பட்டோருக்காக போராடியவர்:

இஸ்ரயேல் மக்கள் கானான் நாட்டை சென்றவுடன் அவர்களை வழிநடத்த கடவுள் பலரை தெரிந்துக் கொண்டார். ஆனால் இவர்களோடு இணைந்த பெண்களில் தெபோராவும், யாகேலும் மட்டுமே துணிச்சலான பெண்களாக வாழ்ந்தனர். குறிப்பாக ஒடுக்கப்பட்ட ஏழை மக்களுக்காக வாழ்ந்த பெண்களில் இவர்கள் முக்கிய பங்கு வகுக்கின்றனர். இருபது ஆண்டுகள் கொடுமையை அனுபவித்தவர்கள் அடிமைகளாக, ஒடுக்கப்பட்ட மக்களாக இருந்தவர்கள் அடித்தள மக்கள், ஏழை எளிய மக்கள் ஆவார்கள் இப்படிப்பட்ட மக்களுக்காக போராடிய பெண்ணாக யாகேல் அடையாளப்படுத்தப்படுகிறார்.

## நிறைவாக

இன்றைக்கும் யாகேலைப் போல நாமும் கடவுளின் விடுதலைப் பணியில் நம்மை இணைத்துக் கொண்டு ஆண்டவருக்குள் ஒப்படைப்புள்ள, துணிச்சலுள்ள பெண்களாக வாழ அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

இறைபணியில் உங்கள் ஆயரம்மா

*Mrs. E. Nancy Baskar*

# ஜெபம்



**அப்பொழுது அன்னாள் ஜெபம் பண்ணி: என் இருதயம் கர்த்தருக்குள் களிகூருகிறது; என் கொம்பு கர்த்தருக்குள் உயர்ந்திருக்கிறது; என் பகைஞரின்மேல் என் வாய் திறந்திருக்கிறது; உம்முடைய இரட்சிப்பினாலே சந்தோஷப்படுகிறேன்.**

**- 1சாமுவேல் 2 :1**

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே!! இயேசுவின் நாமத்தில் தோத்திரங்களை செலுத்துகிறேன். இதை எழுதுவதற்கு வாய்ப்பை கொடுத்த கர்த்தருக்கு நன்றி சொல்லுகிறேன். ஜெபம் என்பது நம்முடைய வாழ்க்கையில் அன்றாட உணவைப் போல இருக்க வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவ வாழ்க்கையிலும் ஜெபம் மிகவும் முக்கியமானது. ஜெப குறைவு வரும்போது ஆசீர்வாத குறைவுகள் வரும். அன்னாளை போல இருதயத்தை ஊற்றி ஜெபிக்க வேண்டும். தினந்தோறும் நாம் ஜெபிக்கும்போது, கர்த்தர் கட்டாயம் நம்மை ஆசீர்வதிப்பார்.

எஸ்தரை போல நாம் உபவாசித்து ஜெபிக்க வேண்டும். எஸ்தர் யூத மக்களுக்காக உபவாசித்து ஜெபம் பண்ணினார்கள். எஸ்தர் புத்தகத்தில் – நானும் ஜெபிக்கிறேன், நீங்களும் எனக்காக ஜெபியுங்கள் என்று வாசிக்கிறோம். நாமும் ஜெபிக்க வேண்டும் பிறரும் நமக்காக ஜெபிக்க தெரிவிக்க வேண்டும். அப்படிப்பட்ட ஆவிக்குரிய சகோதரிகளின் உறவை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பிறருக்கான ஜெபம் நம்மையும் நம்முடைய பிள்ளைகளையும் உயர்த்தும். எஸ்தரைப் போல உபவாசித்து ஆத்தும பாரம் கொண்டு ஜெபிக்க வேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கையில் அனைத்து ஆசீர்வாதங்களும் ஜெபத்தை மையப்படுத்தி தான் இருக்கிறது. ஜெபிக்கிறவர்கள் கிறிஸ்தவர்கள் ஜெபிக்காதவர்கள் கிறிஸ்துவை உடையவர்களாக இருக்க முடியாது. ஆகவே எனக்கன்பான சகோதரிகளே, நம்முடைய அன்றாட வாழ்க்கையில் ஜெபம் மிகவும் அவசியம். அனுதின உணவைப் போல ஜெபத்தை நாம் உட்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட ஜெப ஆவியை கர்த்தர் நமக்கு அருளம்படியாய் நாம் ஜெபம் பண்ண வேண்டும்.

**ஜெபிப்போம்!! ஜெயம் பெறுவோம்!!**

*ARTICLE BY*

**SIS. PHILOMINA**

WOMEN'S Fellowship



# ஆழங்களில் நடக்கப்பண்ணினவர்

**"ஒரு குதிரை வனாந்தர வெளியிலே நடக்கிறதுபோல, அவர்கள் இடறாதபடிக்கு அவர்களை ஆழங்களில் நடக்கப்பண்ணினவர் எங்கே?"**

**(ஏசாயா 63:13)**

*நம்முடைய வாழ்க்கையில் நம்மை வழிநடத்தக்கூடிய தேவன் ஒருவர் உண்டு என்ற விசுவாசத்தை ஒருக்காலும் நாம் விட்டுவிடக் கூடாது. நம்முடைய வாழ்க்கையில் நாம் ஆழங்களில் நடக்கிறவர்களைப் போலக் காணப்படலாம். பல நெருக்கங்கள் போராட்டங்கள் வழியாய் கடந்து போகலாம். ஆனால் நமக்கு இருக்கும் ஒரு நம்பிக்கை, தேவன் நாம் இடறாதபடிக்கு நம்மை நடக்கப்பண்ணுகிறவர். நம்முடைய தேவன் நாம் இடறும்படியாக நம்மைக் கைவிடுகிறவர் அல்ல. நம்முடைய வாழ்க்கையின் எல்லாச் சூழ்நிலைகளிலும் அவரைத் தேடுகிற உணர்வோடு வாழுகிறவர்களாய்க் காணப்படுவது மிக அவசியம். 12ஆம் வசனத்தில் "அவர்கள் நடுவிலே தம்முடைய பரிசுத்த ஆவியை இருக்கக் கட்டளையிட்டு, மோசேயின் வலதுகையைக் கொண்டு அவர்களைத் தமது மகிமையின் புயத்தினாலே நடத்தி, தமக்கு நித்தியகீர்த்தியை உண்டாக்க அவர்களுக்கு முன்பாகத் தண்ணீரைப் பிளந்து" என்று வேதம் சொல்லுகிறதை நாம் வாசிக்கிறோம். ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை என்பது தேவனுடைய உன்னதமான கரத்தை ஒவ்வொரு அடியிலும் பார்க்கக் கூடிய ஒரு விசுவாச வாழ்க்கை. நம்முடைய வாழ்க்கையில் அநேக காரியங்களை நாம் விசுவாசக் கண்களால் பார்க்கத் தவறிவிடுகிறோம். ஆனால் ஒவ்வொரு அடியிலும் சிந்தித்துப் பார்க்கும்பொழுது, கர்த்தர் நம்மை மிகுந்த ஆச்சரியமாய் வழிநடத்துகிறார். அவருக்கு நன்றியுள்ள உணர்வோடு நாம் வாழுவோம்.*

YOUTH FELLOWSHIP



# தேசமே பயப்படாதே !!

தேசமே பயப்படாதே. மகிழ்ந்து களிக் கூறு. கர்த்தர் பெரிய காரியங்களை செய்வார்.
–யோவேல். 22:1

பரிசுத்த வேதாகமத்தில் கர்த்தர்திற்குள் எப்பொழுதும் சந்தோஷமாய் இருங்கள். (பிலிப்பியே 4:4.) என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் நம்மையோ எப்பொழுதும் பல காரியங்களை குறித்து பயம் வாட்டி வதைக்கிறது. குறிப்பாக கொரோனா வைரஸ் பாதிப்பு உலகம் முழுவதும் காணப்பட்டது. இப்போதுதான் உலகம் இயல்பு நிலைக்கு திரும்பிக்கொண்டிருக்கிறது. அதனை குறித்த பயம் இன்றும் உள்ளது. நாம் சங்கீதம் 91:3 ல் அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும் பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் தப்புவிப்பார் என்று வாசிக்கிறோம். பக்தன் யோசுவாவின் வாழ்க்கையில் அவன் தேவ அழைப்பை பெற்ற போது நான் எப்படி இஸ்ரவேல் ஜனங்களை அழைத்து செல்வேன். தேவனோடு முகமாகமாய் பேசின மோசே அவர்களை தேவ ஒத்தாசையோடு அழைத்துச் சென்றது உண்மை தான். ஆனால் நானோ சாதாரண மனிதன் என்று பயந்து நடுங்குகிறான். இந்த நேரத்தில் தான் யோசுவா நீ பயப்படாதே பலன்கொண்டு திட மனதாய் இரு திகையாதே. கலங்காதே நீ போகுமிடமெல்லாம். உன்




தேவனாகிய கர்த்தர் உன்னோடு இருக்கிறார். யோசுவா 1:9 என்று கர்த்தர் அவனைத் தேற்றினாள் ஆகவே தேசங்களில் என்ன காரியங்கள் சம்பவித்தாலும். வேதாகமத்தில். பரிசுத்த வேதாகமத்தில் இருந்த அதே கர்த்தர் நம்மோடு இருக்கிறார். வேதத்தை வாசித்து காலையும் மாலையும் ஜபத்தில் உறுதியாய் தரித்திருந்து அவருடைய இரண்டாம் வருகையில் காணப்படுவோம். பரலோகத்தில். ஆயத்த உள்ளவர்களாய் ஜீவிப்போம் ஜெபிப்போம் கர்த்தர் நம்மை. ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

Article by

சகோ. ஜெயகுமார்

MEN'S FELLOWSHIP

# தேவன் உபயோகித்த பாத்திரங்கள்

**DR. ஏர்னஸ்ட் பேட்டன்**

**(DR. ERNEST PATON)**

**MEDICAL MINISTRY AND FOUNDER OF ASHRAM**

**(1891-1970)**

ஏர்னஸ்ட் பாரஸ்டர் பேட்டன் (DR. ERNEST FORRESTER PATON) 1891 ம் ஆண்டு ஜூலை மாதம் ஸ்காட்லாந்திலுள்ள (SCOTLAND) ஆலோவாவில் (ALLOA) பிறந்தார். அவரது பெற்றோர் திருமதி & திரு. அலக்ஸாண்டர் பாரஸ்டர் பேட்டன் இவர்கள் ஆழ்ந்த தெய்வ பக்தியுள்ள செல்வந்தர்கள்ளாயிருந்தார்கள். ஆலொவாவில் ஒரு நூற்பு ஆலை மேலும் அதிகமான சொத்துக் களை உடையவர்களுமாய் இருந்தார்கள். இவர்கள் சர்ச் ஆப் ஸ்காட்லாந் (CHURCH OF SCOTLAND) திருச்சபையின் ஆர்வமிக்க உறுப்பினர்கள். சபையின் கடல் கடந்த மற்ற நாடுகளில் நடைபெற்ற மிஷனரி பணிகளை ஆதரித்தனர். பெற்றோரின் எடுத்துக் காட்டான பக்தியுள்ள சூழ்நிலையில் இளம் ஏர்னஸ்ட் வளர்க்கப்பட்டார்.

## மிஷனரியாக ஒப்புக்கொடுத்தலும் ஆயத்தமும :



ஏர்னஸ்ட், தம் பெற்றோரின் பெரும் மகிழ்ச்சிக்கு ஏற்ப மிஷனரியாக செல்ல விருப்பம் தெரிவித்தார். ஸ்காட்லாந்தில் தன் பள்ளிப் படிப்பை முடித்து விட்டு கல்லூரி படிப்பிற்காக லண்டன் சென்றார். அவர் கேம்பிரிட்ஜிலிலுள்ள கிங்ஸ் கல்லூரியில் (KING'S COLLEGE CAMBRIDGE) சேர்ந்து படித்தார். மருத்துவ படிப்பு மிஷனரியாக பணிபுரிய மிகவும் உதவியாக இருக்கும் எனக் கருதி பாதியிலேயே தனது கல்லூரி படிப்பை நிறுத்தினார். 1911ல் சீன தேசத்தை

மனதில் கொண்டு அதே கல்லூரியில் மருத்துவ படிப்பில் சேர்ந்தார். 1915 ல் MB (CANTAB) நிறைவு செய்து பின்பு ஏறத்தாழ 1917ல் B.CH ம் நிறைவு செய்தார். தற்போது முழுத் தகுதி பெற்ற மருத்துவராகவும் மார்புகூடு (TUBERCULOSIS) நிபுணராகவும் தன்னை தனது மிஷனரிபணிக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டார். பின்னர் சயரோக சிறப்பு நிபுணராக இந்தியாவில் தனது படிப்பை நிறைவு செய்தார்.

## ஒரே தரிசனமுடைய இருவர் :

1915ல் MB இறுதியாண்டின் போது ஏர்ணஸ்ட் அவர்கள் டாக்டர். சவுரிராயன் ஜேசுதாசன் (DR. SOURIRAYAN JESUTHASAN) அவர்களை சந்தித்தார். DR. ஜேசுதாசன் சென்னை மருத்துவ கல்லூரியில் தனது LMP படிப்பை முடித்து MRCS படித்துக் கொண்டு லண்டனில் பணி புரிந்து கொண்டிருந்தார். பின்னர் FRCS படிப்பையும் அங்கேயே முடித்தார். டாக்டர். ஜேசுதாஸ் அவர்கள் ஏழை எழிய மக்களுக்காக தன் வாழ்வை மிஷனரி பணிக்கென அர்ப்பணிக்க முடிவு செய்திருந்தார். இவ்விரு மருத்துவர்களும் நண்பர்களானார்கள். இந்த நட்பு வாழ் முழுவுவதும் பிரிக்க முடியாத இணை பிரியா நட்பானது. இவ்விரு மருத்துவர்களும் இந்தியாவிலுள்ள அர்ப்பணிக்கப்பட்ட மிஷனரி மருத்துவ குழுக்களில், அவர்களின் கடின உழைப்பிற்காகவும், காப்பாற்றிய கணக்கற்ற உயிர்களுக்காகவும் புகழ் பெற்ற குழுக்களில் ஒன்றாக அறியப்பட்டனர்.

## ஆசிரமம் நிறுவுதல் :

1918 ல் DR. ஜேசுதாசன் FRCS முழுமை செய்து, DR. பேட்டனுடன் இணைந்து தங்கள் சேவையை சர்ச் ஆப் ஸ்காட்லான்டின் (CHURCH OF SCOTLAND) யுனைட்டட் பிறி சர்ச் ஆப் ஸ்காட்லானட் (UNITED FREE CHURCH OF SCOTLAND) க்கு அளித்தனர். UFCS அவர்கள் இருவரையும் பூனாவிலுள்ள தங்கள் மிஷன் மருத்துவமனைக்கு அனுப்பியது. பூனாவிலிருந்த போது இந்திய சுதேச மிஷனரி சங்கத்தோடு தொடர்பு கொண்டனர். இதன் மூலம் சாது சுந்தர் சிங் அவர்களுடைய தொடர்பு கிடைத்தது. இந்த தொடர்பு வாயிலாக சாது சுந்தர் சிங் அவர்கள் அதிகமாக வலியுறுத்தி வந்த ஆசிரமம் நிறுவும்

திட்டத்தை மனதில் கொண்டு, பூனாவில் தங்கள் இரண்டு வருட பணி காலத்தை நிறைவு செய்து விட்டு 1921 மார்ச் 7 ல் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர் என்ற இடத்தில் ஒரு "கிறிஸ்தவ ஆசிரமத்தை" ஏற்படுத்தினார்கள்.

திருப்பத்தூர் ரயில் நிலயத்திற்கு அருகில் ஒரு சிறிய வாடகை கட்டிடத்தில் அந்த ஆசிரமம் ஆரம்பிக்கப்பட்டது. பின்பு பட்டணத்திலிருந்து 2 கி.மீ தொலைவில் (புதுப்பேட்டை சாலையில்) மாற்றப்பட்டது. வழக்கமான மருத்துவ முறையை பின் பற்ற விரும்பாமல் ஆசிரம கொள்கைகளான ஆராதனை, சேவை, சற்செய்திப் பணியினை நிறைவேற்றி வந்தனர். பின்னர் 1926 ல் இது "கிறிஸ்து குல ஆசிரமம்" என


தொடரும்..........

*ARTICLE BY*

M.NESAMONY & FAMILY



# CBS - SENIOR




**Teacher : Mr. Santhosh**

# JULY

*Congratulations*

| KIDS COLOURING | CODE WORD | WORD SEARCH | CROSS WORD | BIBLE QUIZ |
|---|---|---|---|---|
| Bernicia | Patricia | Sherin Shah | Shelbino | Shelbino |
| Smyrna Syntche | Jania Preni | Johan Sanjo | Roshan | Roshan |
| Jania Preni | Johan Sanjo | Roshan | Johan Sanjo | Joshua |
| Johan Sanjo | Hazel Hartlyn | Eric Aaron | Sherin Shah | |
| Hazel Hartlyn | Kariss Angelo | Jason Eric | Eric Aaron | |
| Reagan Shan | Sherin Shah | | Joshua | |
| Kariss Angelo | Jason Eric | | | |
| Chris Gabiriel | | | | |

**Well Done!**

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject:** Your name / Quiz, type / Month - Year

**To Church Email:** csitcalain@gmail.com

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# Revelation 11-20

# வெளிப்படுத்தின விசேஷம் 11–20

## AUGUST '22 - QUESTIONS

1. எத்தனை நாளுக்குப் பின்பு தேவனிடத்திலிருந்து ஜீவா ஆவி அவர்களுக்குள் பிரவேசித்தது?
2. ஆண் பிள்ளையைப் பெற்ற ஸ்திரியைத் துன்பப்படுத்தியது யார்?
3. பூமியில் உள்ளவர்கள் எந்த மிருகத்தை பின்பற்றினார்கள்?
4. யார் பாக்கியவான்கள் என்று எழுதப்பட்டது?
5. ஏழு பொற்கலசங்கள் எத்தனை தூதர்களுக்கு கொடுக்கப்பட்டது?
6. ஆகாயத்தில் கலசத்தை ஊற்றின தூதன் யார்?
7. எத்தனை தலை, எத்தனை கொம்புடைய மிருகத்தின் மீது ஸ்திரி ஏறியிருந்தார்?
8. பலமுள்ள தூதன் எதை எடுத்து சமுத்திரத்தில் போட்டான்?
9. திறக்கப்பட்ட பரலோகத்தில் என்ன காணப்பட்டது?
10. எந்த வருஷம் முடியும்போது சாத்தான் விடுதலையானான்?




## ஜுலை-2022-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. வெளி:1:16 | 2. வெளி:2:15 | 3. வெளி:3:9 | 4. வெளி:4:10 | 5. வெளி:5:7 |
6. வெளி:6:9 | 7. வெளி:7:7 | 8. வெளி:8:12 | 9. வெளி:9:16 | 10. வெளி:10:3

திருமதி. ஜோனிஷ் ஹெர்ஷெல், திருமதி.ஜெயந்தா ஜான், திருமதி.ஜெயின் ராஜவேல், திருமதி.ராதிகா செல்வகுமார், திருமதி.ரோஸ்லின் பாலாஜி, திருமதி.பிப்லின் நெல்சன், திருமதி.ஹெலன் கம்பீரம் திருமதி.ஜமுணா ராணி, திருமதி. பமீலா டேனியல், செல்வி.அஜின்ஷா, செல்வி.ஷெரின்ஷா


ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.


YOUR NAME / BIBLE QUIZ / APR'22 | SENT TO: CSITCALAIN@GMAIL.COM

056 766 8348


# KIDS COLOURING



PRIMARY



# The Sower






## Word Bank

- **Sower**
- **Seed**
- **Path**
- **Birds**
- **Rocky (Ground)**
- **Moisture**
- **Thorns**
- **Soil**
- **Hundredfold**
- **Fruit**
- **Word**
- **God**
- **Devil**
- **Joy**
- **Root**
- **Trial**

## Find the Hidden Words





P A T H

D O P D E L R A

I N U Z F I O R R U B R I S R I

N H U N D R E D F O L D O A S E D F

D S G F G Z U C T A C S S W B N W E M

Z F D C O V B I J O Y K D E V I L O V D M


T H O R N S D V T B O N Y A S D F G S B N

S D F G I A S D F G H R B T R I A L

N B G B M O I S T U R E V B N


B N Y N B A S D






My name is ______________________

# The Lord's Prayer






Our Father which art in

________,

Hallowed be Thy

________.



Thy ________

come, Thy Will be done,

on ________

as it is in Heaven.

Give us this day our daily

________;




and forgive us our debts, as we

________

our debtors.





And lead us not into ________.

but deliver us from ________: For Thine is the kingdom, and the power, and the glory, forever.


Amen.

QUIZ!

# The Good Shepherd

John 10:11-18 (NIV)





ACROSS

1. Wild animal that looks like a dog and hunts in packs
3. The period from birth to death
5. A strong feeling of affection
6. Goes faster than walking
9. What we use to speak
11. One who takes care of the sheep

DOWN

2. The male parent
3. To hear or pay attention to something
4. A group of sheep herded together
7. Wooly animals which are similar to goats
8. The opposite of bad
10. A small place where animals are kept

**SENIOR**
*& above*










## How it Works

**STEP 1** DONATE IN THIS BOX

**STEP 2** COLLECT & SEND

**STEP 3** EDUCATE & CHANGE CHILD'S LIFE



**THE CBS MINISTRY KIDS TOGETHER THEY ARE SUPPORTING, EDUCATING AND CHANGING ONE KID'S LIFE (Ms. Rithika/Chennai).**
**COIN SAVNG BOX WILL BE GIVEN TO ALL KIDS AND EACH KID NEED TO SAVE MONEY AND THAT WILL BE COLLECTED FROM CBS KID'S BY OUR CHURCH VOLUNTEER AND SENT TO THE KID FOR HER EDUCATION & FOR HER BAISC NEEDS.**

# Happy Birthday

# August

| | |
|---|---|
| 01-AUG | MR. S.SIMEYON |
| 02-AUG | MRS. BLESSY GRACE JONISH |
| 03-AUG | MR.D.RAJAVEL |
| 10-AUG | MR. ENOCK PRABHAKARAN |
| 12-AUG | MR. JEREMIAH KINGSTON |
| 14-AUG | MSTR. JEREMIAH ALAN |
| 15-AUG | MR. Y.MESIAH DAS |
| 16-AUG | MR.DERIN JOY |
| 20-AUG | MSTR. ALDAN DERICK |
| 22-AUG | MRS. S.BANU PRIYA |
| 24-AUG | BABY. CRASSLIN DEVONA |
| 28-AUG | BABY. JOANNA STANLY |
| 28-AUG | MRS.AUGUSTA LAWRENCE |
| 29-AUG | MRS. PREEDA NANCY.R |
| 30-AUG | MRS.PADMA JOY |
| 31-AUG | MRS.ANITHA RAJAN |
| 31-AUG | MRS.VINOLIA PRASAD |

## HAPPY ANNIVERSARY

| | |
|---|---|
| 18-AUG | MR. DERICK GASBATH JOY. & MRS. JOHN GERALD SHEEBA DERICK |
| 21-AUG | MR. M.C.CHRISTOPHER & MRS. BEETA CHRISTOPHER |
| 23-AUG | MR. JASON SAMUEL & MRS. PATRICIA SANTHI |
| 26-AUG | MR. SA. YOBU & MRS. ANNA JOTHI |
| 29-AUG | MR. PUSHPARAJ.B & MRS. BIJI KUMARI.G.S |
| 31-AUG | MR. SURESH BABU & MRS. ABISHA K.S |

GET READY

10 & 11 September 2022

CHAMPS FOR CHRIST
COMPETE • CONQUER • CELEBRATE

2022

# CHAMP FOR CHRIST

## EVENTS

- Memory Verse
- Singing
- Fancy Dress
- Story Telling



தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE



STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY

EDITOR

THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348

Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org